(இ) மூன்று புதிய சட்டக் கல்லூரிகள் தோற்றுவித்தல், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் தொடர்பான சட்டம் மற்றும் நீதிமன்றங்கள் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் சட்டக் கல்வி பயில்வதற்காக விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களுக்குக் குறைந்த செலவில் சட்டக் கல்வியினை வழங்கிட புதிதாக 3 அரசு சட்டக் கல்லூரிகள் துவங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக தலா 3 கோடியே 17 இலட்சத்து 50 ரூபாய் ஆயிரம் வீதம், மொத்தம் 9 கோடியே 52 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில், 2019–2020 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்படும். உடனடியாக, ஆரம்பக் கட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு தனி அலுவலர் நியமிக்கப்படுவார்.*

நண்பகல் 12–00

2. கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவர்களுக்குப் போதுமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் 7 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) சேலத்தில் துணை பதிவுத் துறை அலுவலகம் கட்டுதல், திருச்சியில் ஒருங்கிணைந்த வணிக வரித் துறை அலுவலக வளாகம் கட்டுதல் உள்ளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

1. சேலத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை பதிவுத் துறை அலுவலகம் மற்றும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள 24 சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)